# மாலை அணிவித்து மரியாதை



சுதந்திரப் போராட்ட தியாகி குமரன் 115 வது பிறந்தநாள் முன்னிட்டு. ஈரோடு தெற்கு மாவட்ட திமுக தலைமை அலுவலகத்தில் தியாகி குமரன் உருவப்படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார். திமுக நகர செயலாளர் சுப்பிரமணியம். திமுக தலைமை கழக பேச்சாளர் கவிஞர் இளைய கோபால்.மண்டல தலைவர் பழனிச்சாமி மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



# பா.ஜ.க சார்பில் தூய்மை பணி

கள்ளக்குறிச்சி. அக். 7-

கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பா.ஜ.க சார்பாக தூய்மை பணி நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மாவட்ட தலைவர் அருள் தலைமையிலும் ஓ.பி.சி. அணியின் மாநில செயலாளர் வழக்கறிஞர் செல்வநாயகம் சிறுபான்மை பிரிவு மாநில துணைத்தலைவர் அசோக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த தூய்மை பணியில் வட்டாட்சியர் அலுவலகம் செல்லும் வளாக பகுதியில் உள்ள செடி மற்றும் கொடி மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டது. இதில் மாவட்ட பொதுச்செயலாளர்கள் ராஜேஷ், தியாகராஜன் மாவட்ட செயலாளர்கள் மில் ஹரி பிரகாஷ், மாவட்ட துணை தலைவர் சர்தார் சிங் சிறுபான்மை அணி மாவட்ட. தலைவர் தேவ சந்திரகுமார், மத்திய அரசு நலத்திட்ட பிரிவுமாவட்ட துணைத்தலைவர் பிரேம் ராஜ், ஒன்றிய தலைவர்கள் சக்தி, பாக்யராஜ், நாராயணன், ராமச்சந்திரன், நகர தலைவர் சூர்யா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் பலபேர் கலந்துகொண்டனர்.




# ஸ்ரீ சக்ரா ஃபெர்டிலிட்டி தொடங்கும் ஸ்ரீசக்ரா வெல்னெஸ் திட்டம்

சென்னை:தனதுமுதல்ஆண்டுவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் ஸ்ரீசக்ரா ஃபெர்ட்டிலிட்டி, அதன் ஒரு அங்கமாக ஸ்ரீசக்ரா வெல்னெஸ் என்ற பெயரின் கீழ், கருத்தரிப்பு திறனுக்கான முழுமையான சிகிச்சை திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறது. பெற்றோர் பருவம் என்ற நிலையை எட்டுவதற்கான பயணம் சிலருக்கு எளிதானதாகவும் மற்றும் பலருக்கு மிகவும் சிரமமானதாகவும் இருக்கிறது.

கருத்தரிக்காத பிரச்சனைகள் பரவலாக காணப்படுகின்றன; எனினும் இதுவொரு சிக்கலான, கவலையளிக்கும் விஷயமாகவே இருக்கிறது. சமீப ஆண்டுகளில், இளம் தம்பதியர் எதிர்கொள்கின்ற மிகப்பொதுவான பிரச்சனைகளுள் ஒன்றாக கருத்தரிக்க இயலாமை இருக்கிறது. உடலுழைப்பற்ற வாழ்க்கை முறை, மனஅழுத்தம், ஒழுங்கற்ற உறக்க நேரங்கள் மற்றும் பழக்கங்கள், நீரிழிவு,உடற்பருமன், புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்றவை இந்தியாவில் கருத்தரிக்க இயலாமை நேர்வுகள் அதிகரித்து வருவதற்கான காரணங்களுள் சிலவாகும்.

ஸ்ரீ சக்ரா ஃபெர்ட்டிலிட்டியின் மருத்துவ இயக்குனர் டாக்டர். வசுந்தரா ஜெகநாதன் இந்நிகழ்வின்போது பேசுகையில் கூறியதாவது:"சூலாக்கம் என்ற கருமுட்டை வெளியீட்டை தூண்டுதல் போன்ற அடிப்படை சிகிச்சையிலிருந்து ஐவிஎஃப் /இக்சி/மரபியல் (IVF/ICSI/Genetics) போன்ற மேம்பட்ட சிகிச்சைகள் வரை ஒவ்வொரு நபருக்கும் கருவுறலுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்படும் சிகிச்சைகளை நாங்கள் வழங்குகிறோம்.

ஸ்ரீ சக்ரா ஃபெர்ட்டிலிட்டி ன் நிர்வாக இயக்குனர் டாக்டர். குணால் குமார் பேசுகையில், "ஸ்ரீ சக்ரா ஃபெர்ட்டிலிட்டியில் நாங்கள் இப்போது அறிமுகம் செய்யும் ஹோலிஸ்டிக் ஃபெர்ட்டிலிட்டி என்ற இத்திட்டம், மருத்துவ சிகிச்சை, ஒவ்வொருவருக்கும் பொருத்தமான தனிப்பயனாக்கப்பட்ட உணவுமுறை ஆலோசனை, அக்குபிரஸர் மற்றும் அக்குபஞ்சர் சிகிச்சை, உடற்திறனை மேம்படுத்த யோகா, மனநல பிரச்சனைகளுக்கு தீர்வுகாய உளவியல் ஆலோசனை என அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

# மிகவும் கச்சிதமான மற்றும் லைட் வெயிட் சிக்மா லென்ஸ் அறிமுகம்



சென்னை, 07, அக்: சிக்மா நிறுவனமானது உலகின் மிகச்சிறிய மற்றும் லைட் வெயிட் ஆன அல்ட்ரா-வைட்-ஆங்கிள் ஜூம் லென்ஸ் ஆக சிக்மா 10-18mm F2.8 DC DN லென்ஸை அறிமுகம் செய்துள்ளது. APS-C கேமராக்களுக்கான உலகின் மிகச்சிறிய இந்த லென்ஸ் ஆனது பயணத்தின்போது கிரிஸ்டல் க்ளியரான காட்சிகளை பதிவு செய்ய கைகொடுக்கும்.உலகமெங்கும்வெளியாகிகவனமீர்க்கும் இந்த சிக்மா லென்ஸ் அறிமுகமானது இந்தியா முழுவதும் ஒரே நேரத்தில் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக இவ்வெளியீடானது சென்னையிலும் நடைபெற்றது. புகைப்படத்துறையைச் சேர்ந்த பல்வேறு கலைஞர்கள், புகைப்பட நிபுணர்கள், ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சிக்மா லென்ஸ் பயன்படுத்தியது குறித்த தங்களின் சொந்த அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர்.

SIGMA 10-18mm F2.8 DC DN ஆனது சமகாலத்துக்கு ஏற்றது. APS-C கேமராக்களுக்கான உலகின் மிகச்சிறிய மற்றும் இலகுவான அல்ட்ரா-வைட்-ஆங்கிள் ஜூம் லென்ஸாகும். அதி-கூர்மையான ஒளியியல், பிரகாசமான F2.8 அப்பார்ச்சர் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட புஷ்-ஆன் இதழ் வகை லென்ஸ் ஹூட் மூலம், புகைப்படக் கலைஞர்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தெளிவான படங்களை உருவாக்க முடியும். லென்ஸின் ஒட்டுமொத்த அளவைக் குறைத்து, படத்தின் தரத்தை மேம்படுத்தும் தனித்துவமான அஸ்பெரிகல் உறுப்பை லென்ஸ் கொண்டுள்ளது ஹைலைட்.

11.6cm (1:4) குறைந்தபட்ச ஃபோக்கஸ் தூரம், விரிவான பின்னணிகள் மற்றும் மகிழ்வளிக்கும் பொக்கே ஆகியவற்றுடன் தனித்துவமான பாடல்களை உருவாக்க வேண்டும். 260 கிராம் எடையுடன், வேகமான AF ஸ்டெப்பிங் மோட்டார் மற்றும் குறைந்த ஃபோகஸ் ப்ரீத் உடன், சமூக ஊடகப் பயன்பாடு மற்றும் தொழில்முறை திட்டங்களுக்கு ஈர்க்கக் கூடிய வீடியோ உள்ளடக்கத்தை உருவாக்க, லென்ஸை மோட்டார் பொருத்தப்பட்ட கிம்பலில் எளிதாக பயன்படுத்தலாம். லென்ஸ் L-Mount, Sony E-Mount மற்றும் FUJIF-ILM X மவுண்ட் அமைப்புகளுக்குக் கிடைக்கிறது.

# ககன்யான் விண்கலத்திற்கு தேவைப்படும் உயர் தொழில்நுட்ப கட்டமைப்பைத் தயாரித்து, இஸ்ரோவிற்கு வழங்கும் சென்னையைச் சேர்ந்த கே.சி.பி. நிறுவனம் !




சென்னை, 07, அக்: சென்னையைச் சேர்ந்த கே.சி.பி. (KCP) நிறுவனத்தின் ஹெவி இன்ஜினியரிங் பிரிவு, மனித விண்வெளிப் பயணத்தை மேற்கொள்வதற்காகத் தயாரிக்கப்படும் ககன்யான் விண்கலத்திற்கு தேவையான அதிநவீன, உயர் தொழில்நுட்பம் கொண்ட இன்டகிரேடட் ஏர் ட்ராப் டெஸ்ட் - க்ரூ மாடல் என்னும் கட்டமைப்பை இஸ்ரோ (ISRO) வசம் ஒப்படைக்க உள்ளது.

சென்னை, திருவொற்றியூரில் அமைந்துள்ள கே.சி.பி. நிறுவனத்தின் ஹெவி இன்ஜினியரிங் தொழிற்சாலையில், கே.சி.பி. குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் முனைவர் இந்திரா தத் இந்தக் கட்டமைப்பை, இஸ்ரோவின் மனித விண்வெளி விமான மையத்தின் செயல் இயக்குனர் ஆர். ஹட்டன் வசம் இன்று வழங்குகிறார்.

இஸ்ரோ தற்போது மனித விண்வெளி விமானப் பயண முயற்சியில் முழுவீச்சில் ஈடுபட்டு வருகிறது. இந்த ககன்யான் விண்கல வடிவமைப்பில், ஒரு முக்கிய அங்கமாகிய இன்டகிரேடட் ஏர் ட்ராப் டெஸ்ட் - க்ரூ மாடல் என்னும் கட்டமைப்பின் ஃபேப்ரிகேஷனுக்கான ஆர்டரினை கே.சி. பி.க்கு அளித்தது, இஸ்ரோ.

மேலும், இனி வரும் காலங்களில், கே.சி.பி. நிர்வாகம் தனது தொழிற்சாலையில் உதிரிபாக உற்பத்தியில் தொடங்கி ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு வரை அனைத்தையும் மேற்கொள்வதற்கு வசதியாக உள்கட்டமைப்பினை விரிவாக்கத் திட்டமிட்டுள்ளது.



# பழுதடைந்த மின் கம்பம்

கடலூர் மாநகராட்சி வன்னியர் பாளையம் காமராஜ் நகரில் சிறுவர் பூங்கா மற்றும் பிள்ளையார் கோயில் அருகில் உள்ள மின் கம்பம் பழுதடைந்துள்ளதால் ஆபத்தான நிலையில் உள்ளதால் ஆபத்து ஏற்படும் என பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர். உடனடியாக சம்பந்தப்பட்ட மின்சாரத் துறையினர் மற்றும் உதவி மின் பொறியாளர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்து மின்சார கம்பத்தை மாற்றி அமைக்குமாறு பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கடலூர் மாநகராட்சி வரி வாக்கு அளிப்போர் நல சங்கத்தின் சார்பில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**IndoStar Home Finance Private Limited**

Regd. Office: - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
CIN : U65990MH2016PTC271587 Tel: +91 22 45107701
Email: connect@indostarhfc.com; Website: www.indostarhfc.com

அறிவிப்பு

2021 ஆம் ஆண்டின் முதன்மை திசை-வங்கி அல்லாத நிதி நிறுவனம் - ஹவுசிங் ஃபைனான்ஸ் கம்பெனி (ரிசர்வ் வங்கி) திசைகள், 2021 இன் பத்தி 93 இன் படி, நிறுவனத்தின் கிளை அலுவலகம் எண்.5, ஸ்வர்ணா காம்ப்ளக்ஸ் 2வது மாடி, நடராஜபுரம் என்ற முகவரியில் உள்ளது. வடக்கு, எம்.சி. சாலை தஞ்சாவூர்-613005, தமிழ்நாடு பின் குறியீடு -613005, பிஷப் சுந்தரம் வளாகம், புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர்-613007 இல் அமைந்துள்ள அருகிலுள்ள கிளை அலுவலகத்திற்கு செயல்பாடுகள் மாற்றப்படுவதால், ஜனவரி 4, 2024 வணிக நேரத்தின் முடிவில் இருந்து மூடப்படும். ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேலே குறிப்பிட்டுள்ளபடி அருகில் உள்ள கிளை அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது connect@indostarhfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்தில் (www.indostarhfc.com) அணுகலாம்.

இந்தோஸ்டார் ஹோம்ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
Sd/-
நிதி சதானி
நிறுவனத்தின் செயலாளர்

தேதி: 06.10.2023



கள்ளக்குறிச்சி மாவட்டம், ஏ.கே.டி பள்ளி மைதானத்தில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான 3,000 மீட்டர் ஓட்டப் பந்தயம் போட்டியில் வெற்றி மாணவியர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நா.சத்தியநாராயணன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பதக்கங்களை அணிவித்தார்.



## கடலூர் இன்னர் வீல் சங்கத்தின் சார்பில்

# மரம் நடும் விழா - விழிப்புணர்வு நிகழ்ச்சி

கடலூர் அருகே கிருஷ்ணாபுரத்தில் கடலூர் இன்னர் வீல் சங்கத்தின் சார்பில் மரம் நடும் விழா மற்றும் புற்று நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு சங்கத்தின் தலைவி கீதாபிரையோன் தலைமை தாங்கி மரம் நடுவிழா பற்றி வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவி ஸ்ரீதேவி இந்திரகுமார் முன்னிலை வைத்தார் .சிறப்பு விருந்தினராக கடலூரில் அரசு மருத்துவர் ஸ்ரீதர் கலந்து கொண்டு டெங்கு நோய் மற்றும் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு சிறப்புரையாற்றினார் .இந்த நிகழ்ச்சியில ஊராட்சி மன்ற தலைவி செண்பகபார்த்திபன் வாழ்த்துரை வழங்கினார். துணைத் தலைவர் வீரப்பன் பாராட்டுரை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் செயலாளர் சுபஸ்ரீ நன்றி கூறினார் .பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. கடலூர் இன்னர் வீல் சங்க நிர்வாகிகளும் பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

உயர்திரு சார் ஆட்சியர்
அவர்களுக்கு
சிதம்பரம்

கோவிந்தராஜ்
த/பெ முத்துக்குமார்
கம்பன் காலனி தெரு
நந்திமங்கலம்
அத்திப்பட்டு அஞ்சல்
காட்டுமன்னார்கோவில்

– மனுதாரர்

சார் ஆட்சியர் அலுவலகம்
சிதம்பரம்

– எதிர் மறுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் கோவிந்தராஜ் என்னும் நான் மேற்கண்ட முகவரியில் நிரந்தரமாக வசித்து எனது தாய் சின்ன பொண்ணு என்பவர் 17/2/2013 இயற்கையாகவே அவர்களின் இல்லத்தில் இறந்து விட்டார் இறப்பு சான்றிதழ் விவரம் தெரியாததால் இறப்பை பதிவு செய்யாமல் விட்டுவிட்டேன் எனவே அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளேன் இறப்பு சான்றிதழ் பெற வேண்டி இதனை ஏற்று சார் ஆட்சியர் எனக்கு இறப்பு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று மனு கொடுத்துள்ளேன் கவனக்குறைவாக இறப்பு விபரத்தை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு விட்டதாகவும் தற்போது அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டி மனுவும் மனுவின் பேரில் ஆட்சேபனை உள்ளவர்கள் மேற்கண்ட விளம்பர செய்திகள் 15 நாட்களுக்குள் சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபணை தெரிவித்து கொள்ள வேண்டி தவறும் பட்சத்தில் ஒரு மனதாக உத்தரவிடப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்

கோவிந்தராஜ்
த/பெ முத்துக்குமார்
கம்பன் காலனி தெரு
நந்திமங்கலம்
அத்திப்பட்டு அஞ்சல்
காட்டுமன்னார்கோவில்

உயர்திரு சார் ஆட்சியர்
அவர்களுக்கு
சிதம்பரம்

லலிதா
க/பெ முருகன்
4/3/12 மேற்கு மடவிளாகம்
பெருமாத்தூர்
புவனகிரி வட்டம்

– மனுதாரர்

சார் ஆட்சியர் அலுவலகம்
சிதம்பரம்

– எதிர் மறுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் லலிதா என்னும் நான் மேற்கண்ட முகவரியில் நிரந்தரமாக வசித்து எனது பாட்டி நாவம்மாள் என்பவர் 10/2/2012 இயற்கையாகவே அவர்களின் இல்லத்தில் இறந்து விட்டார் இறப்பு சான்றிதழ் விவரம் தெரியாததால் இறப்பை பதிவு செய்யாமல் விட்டுவிட்டேன் எனவே அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளேன் இறப்பு சான்றிதழ் பெற வேண்டி இதனை ஏற்று சார் ஆட்சியர் எனக்கு இறப்பு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று மனு கொடுத்துள்ளேன் கவனக்குறைவாக இறப்பு விபரத்தை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு விட்டதாகவும் தற்போது அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டி மனுவும் மனுவின் பேரில் ஆட்சோபனை உள்ளவர்கள் மேற்கண்ட விளம்பர செய்திகள் 15 நாட்களுக்குள் சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபணை தெரிவித்து கொள்ள வேண்டி தவறும் பட்சத்தில் ஒரு மனதாக உத்தரவிடப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்

லலிதா
க/பெ முருகன்
4/3/12 மேற்கு மடவிளாகம்
பெருமாத்தூர்
புவனகிரி வட்டம்

**காணவில்லை**

தேனி மாவட்டம், தேனி வட்டம், குப்பிநாயக்கன்பட்டி, நடுத்தெரு, கதவு எண்: 158, என்ற முகவரியில் வசிக்கும் கொண்டசாமி அவர்களின் மகன் K.போஸ் என்பவர் தகவலின் பேரில் கொடுக்கலான பொது அறிவிப்பு மேற்சொன்ன எமது கட்சிக்காரருக்கு சொந்தமான தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான சார்பதிவு எண் : 1494/ 1975 ல் உள்ள கிரைய ஆவணத்தை கடந்த 03.10.2023-ஆம் தேதியன்று குப்பிநாயக்கன்பட்டியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க வந்த போது தவறிவிட்டது . இது குறித்து எமது கட்சிக்காரர் கடந்த 06.10.2023-ஆம் தேதி கண்டமனூர் காவல்நிலையத்தில் இணையதளம் வாயிலாக புகார் செய்து புகார் எண் : CNB 23194373 -என நம்பராகியுள்ளது. யாரேனும் எடுத்திருந்தால் விளம்பர கண்ட 15 தினங்களுக்குள் எமக்கோ அல்லது மேற்கண்ட எனது கட்சிக்காரரின் விலாசத்திற்கோ தெரியப்படுத்தவும், பின்னிட்டு வரும் ஆட்சேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது என்பதனை இந்த அறிவிப்பு மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

S.RAJAMOHAMED, M.A.,B.L.,
வழக்கறிஞர் அன்டு நோட்டரி
தேனி
தேனி மாவட்டம்.